உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

| மலர் 3. | பிங்களஹூ புரட்டாசிமீ 1917ஹூ செப்டம்பர்மீ | இதழ் 9. |
| --- | --- | --- |

கடலன்ன பொய்மைகள் செய்யினும் வெய்யகடுநரகத்
திடநம னேவுதற் கெவ்விடத் தானிருஞ் செந்தமிழாற்
றிடமன்னு மாமதிற் சண்பைத்தலைவன் செந்தாமரையின்
வடமன்னு நீண்முடி யானடிப் போதவை வாழ்த்தினமே.

## சிவஞானபோதம்.

### மூன்றுஞ் சூத்திரம்—நான்காம் அதிகரணம்.

### ஒடுக்கமறிதலின் ஆன்மா வுளது.

(இ - ள்.) ஐம்புலன்களும் ஒடுங்கின சொப்பனத்தானத்தில் நிகழ்ந்தனவற்றை நனவின்கண் அறிதலினால் அவ்வாறறியும் அறிவாகிய ஆன்மா உண்டு (எ-று.)

இதில், க-வது—தன்னாற் கூறப்படும் பொருள் :— கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே அக்கனவுடற்கு வேறாய் உயிருண்டு.

2-வது—ஐயப்பாடு—ஆன்மா கனவுடலோ, அதனின்வேறோ?

3-வது—பிறர் கூறும் பக்கம்—இந்திரியங்களின் வேறாயறிவது சூக்கும வுடம்பே யாகும். அது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி யறியும். ஆதலால் அவ்வாறறியும் சூக்கும உடம்பே ஆன்மாவாம். (இது சூக்கும தேகான்மவாதிகள் பக்ஷம். இவர்களும் உலோகாயதருள் ஒரு சாரார்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு— கனவின்கணிகழும் சூக்குமவுடம்பே ஆன்மாவாயின், கனவொழிந்து நனவின்கண் வந்தபோது அக்கனவு நிலையைக் கண்டபடியே கூறவேண்டும். அங்ஙனங்கூற வறியாது மயங்கி மயங்கிக் கூறுதலால், தூலவுடம்பால் சாக்கிராவத்தையையும் சூக்குமவுடம்பால் சொப்பனுவத்தையையும் அனுபவிப்பதும், சாக்கிரத்தில் அனுபவித்தவை சொப்பனத்தில் தோன்ருமற் போதலையும், சொப்பனத்தில் அநுபவித்தனவற்றுள் சில சாக்கிரத்தில் தோன்றுதலையும் சில தோன்ருமற் போதலையும் அறிவதும் ஆகிய அறிவே ஆன்மாவாம்.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

*அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்*
*செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்*
*வேருென்று கொண்டு விளையாடி மீண்டதனை*
*மாறலுட னீயல்லை மற்று.*

அன்வயம்— அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் கிடப்ப, அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று, அவ்வுடலின் வேறு ஒன்றுகொண்டு விளையாடி, மீண்டு அதனை மாறல் நீ உடல் அல்லை.

(இ-ள்.) அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் = அத்தூல உடம்பினின்று உயிர்ப்பனவாகிய ஐம்பொறிகள்—கிடப்ப = (அவ்வுடம்பிலேயே தொழிலற்றுக்) கிடப்பனவாக—அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று = (அவை அவ்வாறு கிடந்தபோது, புறத்து நிகழும் தொழிற்பாடெல்லாம்) அடங்கி அவ்வுடலினுள்ளே வருத்தமில்லாமற்போய்—அவ்வுடலின் = அத்தூல உடம்புபோல்— வேறு ஒன்று கொண்டு விளையாடி = அதற்கு வேருகியதோர் உடம்பை எடுத்துக்கொண்டு (வேருெரு விதமாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று) விளையாடி—மீண்டு அதனை மாறல் = மீளவும் அதனை மாறி மேற்செல்லுதலால் (அஃதாவது, சொப்பனுவத்தை விட்டு நீங்கி அதற்கு மேலுள்ள சாக்கிராவத்தைக் குரிய தூல தேகத்தை யடைதலால்)— நீ உடல் அல்லை = நீ அச்சூக்கும தேகமல்லை; அதனின் வேருவை. (எ-று.)

உயிர்ப்ப = உயிர்ப்பன. மீண்டு = மீள. மாறல் = மாறலால்.

அவ்வுடம்பு என்று சுட்டியது முன் தேகான்மவாதிகளை மறுத்த விடத்து உயிரன்றெனச் சாதித்த தூல உடம்பை.

சூக்கும தேகமாவது சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரண தன்மாத்திரைகளைந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டினாலும் உண்டாகும் அரு உடம்பு.

---

## மாயா விளக்கம்.

மா என்பது ஒடுங்குதல். யா என்பது வருதல். ஆதலின் எல்லாக் காரியங்களும் தன்னிடம் வந்து ஒடுங்குதற்கும் தன்கணின்று தோன்றுதற்கும் காரணமாய் நிற்பது யாது? அது மாயை என்று சொல்லப்படும். அம்மாயை ஒன்றற்கொன்று நுட்பமாய்ச் சென்றடங்கும் சூக்குமப் பொருளெவற்றினுக்கும் முடிவிடமாய் நிற்கும் அதிஷ்டானமாதலால் அதி சூக்குமப் பொருளாம்.

மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றுவகைப்படும். இவையே பரப்பிரகிருதி எனவும், அபரப் பிரகிருதி எனவும், மூலப் பிரகிருதி எனவும் சொல்லப்படும். இவற்றுள் சுத்தமாயையிலிருந்து அசுத்தமாயை தோன்றிற்று என்பர் சிலர். இது பொருத்தமன்று. சுத்தமாயை வேறு. அசுத்தமாயை வேறு. இவ்விரண்டும் தனித்தனி முதற்பொருள்களாம். பிரகிருதி மாயை மாத்திரம் அசுத்தமாயையின் காரியமாயுள்ளது. இம் மூவகைமாயையிலிருந்தே சைவசமயத்தில் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களுந் தோன்றின. சுத்தமாயையில் தோன்றிய தத்துவங்கள் ஐந்து. அசுத்தமாயையில் தோன்றிய தத்துவங்கள் ஏழு. பிரகிருதி மாயையில் தோன்றிய தத்துவங்கள் இருபத்து நான்கு. இந்த ஐந்து, ஏழு, இருபத்து நான்கு ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் மாயாகாரியங்களாம்.

சுத்தமாயையின் காரிய மைந்தும் சிவதத்துவம் எனப்படும். அசுத்தமாயையின் காரிய மேழும் வித்தியாதத்துவம் எனப்படும். பிரகிருதி மாயையின் காரிய மிருபத்து நான்கும் ஆன்ம தத்துவம் எனப்படும். இவற்றுள் சுத்தமாயா தத்துவங்களினது தோற்றம் விருத்திகாரியமாகும். அதாவது ஆலையிலிருந்து கூடாரந் தோன்-

றும்போது ஆடைக்கு யாதொரு நாசமுமின்றி விருத்தியாய்த் தோன்றுவது போலாம். அசுத்தமாயா தத்துவங்களினது தோற்றம் ஏகதேச பரிணாமமாகும். அதாவது நெய்யின் ஏகதேசத்தில் புழு உண்டாதல்போலாம். இப்படிக்கன்றி இந்த அசுத்தமாயா தத்துவங்கள் பிரமத்தின் விவர்த்தன காரியமென்றல் பொருந்தாது. (விவர்த்தனம் ஒன்று மற்றொன்றாக மாறுபடக்காண்டல்; கானலில் நீர்த்தோற்றம்போல்.) என்னை? பிரமம் எல்லாவுயிர்களுக்கும் பிரகாசத்தைத் தந்து ஞானச்சுடராய் நிற்குமல்லது இப்பியில் வெள்ளி போலத் தோற்றமாத்திரமாய்க் காணப்பட்டு ஜீவர்களை மயக்கும் பொருளல்ல. அன்றியும் பிரமம், எப்பொருள்களையும் தன் சந்நிதியில் காரியப்படுத்துவதன்றி விருத்தி, பரிணாமம், விவர்த்தனம் ஆகிய மூவிதகாரியப் பாட்டினுள் ஒன்றினும் உட்படுவதன்று. இவ்வுண்மையறியாத சிலர் இப்பியில் வெள்ளித்தோற்றமுண்டாகிக் காண்பாரை மயக்குதல் போல பிரமமே மாயா தத்துவகாரிய வுலகமாய் விவர்த்தனப்பட்டு உயிர்களை மயக்குமென்று கூறுவர். இவ்வாறு பிரமம் மயக்கும் பொருளாயின் அதனில் வேறாக ஆன்மாக்களைத் தெருட்டும்பொருள் யாதோ?. விடைபகர இயலாதாகலின் ஆன்மாவினுடைய மயக்க வுணர்வினை முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநின்ற பிரமத்தின் தலையிலேற்றிப் பிணங்கும்படிச் செய்தல் சால்புடைத்தன்று. ஆயின்,

மண்ணோடைந்தும் வழங்குயிர்யாவுமே
அண்ணலேயுன்னருள் வடிவாகும்மே.........என்று

ஸ்ரீ தாயுமானசுவாமிகள் வெளிப்படையாக ஓதியுள்ளதின் கருத்து யாதெனில் கடவுள் எல்லாப் பொருள்களினிடத்தும் அத்துவிதமாய் வேறற நின்ற இயல்பை விளக்கியுதேயன்றி மயங்கக் கூறியதன்று. அவ்வுண்மையினை அடியில் காட்டிய சில பிரமாணங்களால் உய்த்துணர்க.

வானாதி நீயெனவே வைத்தமறை என்னையு நீ
தானாகச் சொல்லாதோ சாற்றாய் பராபரமே......

பாராதி நீயாய்ப் பகர்ந்தால் அகமெனவும்
ஆராயுஞ் சீவனு நீ யாங்காண் பராபரமே......

விளக்குந் தகளியையும் வேறென்னார் நின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே......

அருளுடைய பரமென்றே அன்றுதானே
யானுளனென்றும் எனக்கே ஆணவாதி
பெருகுவினைக் கட்டென்றும் என்றேற்கட்டிப்
பேசியதன்றே அருணூல் பேசிற்றன்றே.

இப்பிரமாணங்களும் ஸ்ரீ தாயுமானசுவாமிகளுடையனவே. இன்னும் அநந்தமுள. விரிக்கிற் பெருகும்.

சோ. சிவ அருணகிரிமுதலியார், சோளங்கிபுரம்.

---

## கூர்ம புராணம்.

(121 - வது பக்கத்தொடர்ச்சி.)

முக்குணத்தாலாய மூவர்களுள் முதலிருவர்க்குஞ் சத்துவ ராசதங்களை ஒரோவழி யுபசரித்து, இறுதியினிற்கும் எம்பிரானை உருத்திரர்க்குத் தாமதகுணத்தைச் சாற்றினும் அவர்செயலியாவும் கருவிகொண்டறுத்துக் காயப்புண்ணாற்றுந் தருமவைத்தியன் றன்மைபோலவும், புதல்வர் தஞ்சொல்லைப் போற்றுவிடத்து வளாரி லடித்துறக்கிப் பந்தமிடுந் தந்தைதாயர் தண்டம்போலவும், அழுக் கெடுக்கும் வண்ணான் வெள்ளாவியிலே வைத்துக் கல்லின் மழுக்கும் வண்மைபோலவும் புறத்துக் காணப்படினும், அகத் தவையெல்லாம் ஆன்மாக்கட்குக் கன்மத்தையூட்டி மலமுங்கழீஇ யந்தமிலின்பத் தழிவில் வீட்டை யளிப்பான்செய்யும் பெருங்கருணைத் திறனாய்ப் பிறங்கலான், வெண்ணிற விளக்கம் வாய்ந்த சத்துவகுணரூபசுதந்தரன் சங்கரனேயென்றும், அவனியல்பினையும், அடையுமுபாயங்களையும் உண்மையிற்கூறுஞ் சிவபுராணங்களே சத்துவகுண புராணமாம் என்றும், இப்புராணமும் அவற்றொன்றாய்ச் சத்துவகுணத்த தாமென்று முணர்த்துவான் "வெண்மை" என்ற வண்ணப் பண்புமொழியை முதலில்வரித்தும், அப்புராண மென்பெயர்த்தோ வென்பார்க்கு, வெண்ணிறமுள்ள திருப்பாற்கடலி லமுதங் கடைந்தகாலத்துக் கூர்மரூபமாகிய விட்டுணுவினால் தாமரைமலரில்வாழு மிலக்குமிக்குக் கற்பவிருத்தாந்தங்கள் எடுத்துரைக்கப்பட்டமையாற் கூர்மபுராணம் என்னும் பெயர்த்தெனக் குறிப்புரைப்பான், பால், தவள முதலிய வெண்மைப் பண்புக்குரியவாய பரி

யாயச் சொற்களை யெடுக்காது, நீருக்குரிய எழுத்தாகிய வகரத்தை முதலாகவுள்ள மொழியையே வைத்துங் கூறினன் என்க. என்னை? வகரவெழுத்தால் நீரும், அதனுல் அதனது நிறமாகிய வெண்மையும், குறியாகிய தாமரையும், அதிதேவதையாகிய விட்டுணுவும், தோற்றமும் உண்மைவிளக்கத்தாற் பெறப்படுவ வாகலின்.

இறைவன் பொங்கியெழுந்து முரணெனமுடுகிய கங்கையைக் குறைத்தடக்கிய திருமுடியிற்றனே, மங்கியிழிந்து சரணெனச் சார்ந்த சந்திரனை நிறைத்தடக்குந் தன்மைபோல, அவனது மெய்ம்மைப் புகழ்மிக்க விப்புராணப் பொருளை மேற்கொண் டடைவார் மேலாவிளங்குவார் என்றும், "அலர்மதியு மென்கவியுங் களங்குறையுங் கலைகுறையுமானக் காலும்-புலவரெலா மிகமகிழ்ந்தே யமுதெனவே பயனுகர்ந்து புகழா நிற்பர்-நிலவுமிழுமதி கரவு புரிபவர்க்கும் விரகியர்க்கு நெருப்பாத் தோன்று-முலகினிலென் கவியழுக்காறுடையவர்க்கும் பேதையர்க்கு முவப்பெய்தாதே" என்றும், "மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலுந், தேய்தலுமுடைமையைத் திங்கள் செப்புமால்" என்று சிந்தாமணியிற் கூறியாங்கு, இப்புராணமும்உலகத்தோற்றமொடுக்கமுதலிய பஞ்சலக்கணங்களையும் உணர்த்து மென்றுங் குறிப்பா லுணர்த்துவான் "நிலாக் கற்றை கான்று விளங்கும் பிறை" எனவும், பிறைச்சந்திரன் வெள்ளியதாய் வளைந்து, இருளைப்போழ்ந்து, அமுதவொளியை யளித்து, உடுக்கணத் தலைமைபூண்டு, அசுவினிமுதலிய நட்சத்திரங்களுள் கிரமந்தப்பாமே கலந்து அவைகளை யளிக்கச் சுழன்று, அருவு முருவும் அருவுருவுமுடைத்தாய், இரவினும், பகலினும், இராப்பகலினு நிலவி, உலகத்தானும், பதினெண் கணங்களானும் பரவப்படுந்தன்மைத்தாய், வானிலியங்குங்கும் நவக்கிரகங்களுள் ஏனைய கிரகங்கள் போலக் காணப்படாத (இராகு கேதுக்களாகிய) பொருள்களைத் தன்கட்காட்டி, முகத்திற் சிறந்து விளங்கி யொளிரும் பெருமைத்தாகலின் அவ் வொப்புமை கொண்ட கோடென்பான் "பிறைக் கோடு" எனவுங் கூறினன்.

(இன்னும் வரும்.)

# பாரதம்.

## அருச்சுனன் பாசுபதம் பெற்ற சரித்திரம்.

### தேவாரம்.

*அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்*
*கொடுத்தானைக் குலவரையே சிலையாகக்கூரம்பு*
*தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாய*
*மெடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.*

தனது சிறிய தந்தையாகிய விதுரன் தன் பிதாவாகிய திருத ராட்டிரனை வெறுத்து, பஞ்சபாண்டவர் வசித்திருந்த காமியவனஞ் சென்று திரும்பியதைத் துரியோதனனறிந்து கடுங்கோபங்கொண்டு, பீஷ்மர் கிருபர் முதலிய பெரியோர்களை வருவித்துச் சபை கூட்டி, விதுரன் தன் பிதாவை விரோதித்துப் பாண்டவரிடம் சென்று திரும்பி வந்ததை யுரைத்து "நம்முடைய ஆஸ்தானத்தின் செல்வங்களை யனுபவித்துக்கொண்டே நமக்குப் பகைவராகிய ஐவர் பட்சமாயிருக்கும் விதுரர் செய்கையைப் பற்றி நீங்கள் சொல்லும் தீர்ப்பு யாது?" என்று கேட்டான். அதைக்கேட்ட சபையார் இன்னது சொல்வதென்று தெரியாமல் மயங்கிக் கிடந்தார்கள். அச்சமயத்தில் தவசிரேஷ்டராகிய அமித்திரியமுனிவர் தமது யாத்திரையின் வழியில் ஐவர் வனவாசம் புகுந்ததையும், அதற்குக் காரணமாயிருந்தவன் துரியோதனனே என்பதையும் அறிந்து, அவனுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்திப் பாண்டவர்களும் கௌரவர்களாகிய துரியோதனாதியரும் ஒருவரை யொருவர் நேசித்து வாழுமாறு செய்ய விரும்பி, துரியோதனன் சபைக்குத் தற்செயலா யெழுந்தருளினர். துரியோதனன் அவரை யுபசரித்து அவர் வந்த காரியத்தை வினவினன். அவர் துரியோதனனுக்கு ஆசிகூறி அவனை நோக்கி, "ஓ, துரியோதன மகாராசனே, யான் திவ்விய தேசங்கள் தோறும் யாத்திரை செய்து வரும் வழியில் காமியவனத்தில் உன் சிறிய தகப்பன் பிள்ளைகள் பஞ்சைகளாய் வனவாசஞ் செய்வதையும், அதற்கு நீயே காரணமென்பதையும் அறிந்து இவ்விடம் வந்தேன். நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். இவ்வுலக வாழ்க்கையோ, அனித்தியமானது. அதனினும் இக்காயமோ நீர்மேற்குமிழிபோன்றது. செல்வமோ நீரில் தோன்

றும் நெடுந்திரையைப்போன்றது. ஆதலால் இவ்வுலக வாழ்க்கையை மதித்து நீ தருமராசன் முதலியவர்களுக்குத் தீங்கு புரிதல் நீதியன்று. அவர்கள் உனக்குச் சகோதரர்கள். பகைவரன்று. அவர்கள் ஒழுக்கத்திலும் வல்லமையிலும் குறைந்தவர்களல்ல. அவ்வாறிருந்தும் சத்தியத்திற்கு மாறுபடாமல் பெரியோர் கட்டளையின்படி காட்டிலுறைகின்றனர். அவர்களை நீ பகைத்தால் அவர்களுடைய நல்லொழுக்கமே உனக்குப் பகையாய் உன்னை யழித்துவிடும். அவர்கள் மானிடராயிருப்பினும் தேவாமிசமுடையவர்கள். நீ இனி அவர்களை வஞ்சியாமல் இங்கு வரவழைத்து அவர்களுக்குரிய சொத்துகளைக் கொடுத்துவிட்டு உனக்குரிய இராச்சியத்திற் செங்கோல் செலுத்திச் சுகமாய் வாழ்ந்திரு'' என்று கூறிப் பின்னும் பலவாறாக இதோபதேசஞ்செய்தனர்.

இவைகளைத் துரியோதனன் கேட்டுக் கோபமடைந்து, சபையாரை நோக்கி, "பெரியோர்களே, இம் முற்றத்துறந்த பெரியவர் உலகத்தார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன வென்றிராமல் ஐவரையும் என்னையும் உறவுசெய்விக்கப் பார்க்கிறார். நாங்களிருவரும் ஒத்துவாழ்ந்தால் இவரடையும் பயனியாது? இவர் சொல்லியதை யோசித்தால் விதுரன் பாண்டவர்களிடம் சென்று ஏதோ ஒரு சூழ்ச்சிசெய்து வைத்திருப்பதுபோற் காணப்படுகிறது. அதை நம்பிப் பாண்டவர் இம்முனிவரைத் தூதனுப்பினார்கள். மகுடமன்னர்கள் சொல்லியுங் கேளாத நான் இம் முனிவாக்கியத்திற்கு உடன்படுவேனோ;'' என்று கூறி, முனிவரைப்பார்த்து "ஐயா, தண்டகமண்டலத்தைக் கண்டு மரியாதைசெய்து உம்மை இம்மகாசபையில் உட்காரவைத்தேன். நீர் ஐவர் தூதுவரென்பதை யறிந்திருந்தால் நான் உம்மை இம்மகா சபையில் உட்காரவிட்டிருக்கமாட்டேன். சீக்கிரத்தில் இதை விட்டெழுந்திரும்'' என்றான். அயித்திரியமுனிவர் துரியோதனன் அவ்வாறு கூறியதைக் கேட்டுச் சினங்கொண்டு அவனைநோக்கி "அடா, பாவி, கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் உடையவனுக்கு அடக்கமிருத்தல்வேண்டும். எல்லாரிடத்திலும் அன்பிருத்தல்வேண்டும். நீ உனக்கு இடம் பொருள் ஏவல் மிகுந்திருக்கின்றனவென்றெண்ணி இறுமாப்படைந்திருக்கிறாய். அன்பும் அடக்கமுமில்லாதவனுக்கு இடம் பொருள் ஏவல் எல்லாம் இருந்தும் என்ன பயன் செய்யும்? உன் செல்வமே உன்

உயிருக்கு வாளாய் முடியும். நான் வாந்திபண்ணினசோறெனை அருவருத்துத் தள்ளிய செல்வத்தருக்கினால் நீ யென்னை யொரு துரும்பாகப் பாவித்தாய். நீ பிழைக்கவேண்டி உனக்குப் புத்தி புகட்டவந்த என்னை இகழ்ந்து கூறினை. நீ சிங்காதனத்தில் உட்கார்ந்திருக்கும் இறுமாப்பினால் என்னை உட்காரவேண்டாமென்று உதாசீனமாய்க் கூறினாய். இனி நடக்கப்போகும் யுத்தத்தில் நீ பஞ்சைகள் என்று மதித்திருக்கும் பாண்டவருள் ஒருவனாகிய வீமனால் உன் தொடைமுறிந்து சாவக்கடவாய்" என்று சபித்துத் தக்ஷணம் சபையைவிட்டகன்றார்.

துரியோதனன் குணமென்னுங் குன்றேறி நின்ற அம்முனிவரிட்ட சாபத்திற்கும் அஞ்சாதவனாய், சபையாரைப்பார்த்து "பாண்டவர்கள் பஞ்சைகளாய் வனவாசஞ் செய்துகொண்டிருந்தும் தங்கள் துர்க்குணங்களை விட்டொழிக்காமல் இம்முனிவனை இங்கே யனுபபி என்னைச் சாபத்திற்குள்ளாக்கினர். அவர்களை இனி உயிரோடிருக்கவிடேன். நீங்கள் என்னைத் தடுத்தலாகாது" என்று கூறி துச்சாதனன், கர்னன், சகுனி என்னும் இம் மூவரைப் படைத் துணையாக்கொண்டு, யுத்தசன்னுத்தனாய்ப் பாண்டவர் இருக்கும் காமிய வனத்தை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில், வேதங்களைச் சிக்கறுத்த வியாசமுனிவர் தற்செயலாய் எதிரே எழுந்தருளினர். துரியோதனன் அவரைக்கண்டு உடனே இரதத்தைவிட்டிறங்கி நமஸ்கரித்து நின்றான். வியாச முனிவர் அவனை யாசீர்வதித்து, அவன் பாண்டவர் மீது படையெடுத்துச் சென்றதை யறிந்து, அவனைப்பார்த்து "துரியோதன மகாராசனே, நீ சகலகலாவல்லவனாயிருந்தும் ஏழைகள் மேல் கோபங்கொண்டு காலமல்லாக்காலத்தில் போர்க்கெழுதல் உன் வீரபராக்கிரமத்திற்கு அழகாகுமா?, அப்படிச் செய்தால் உன்னை மற்ற அரசர்கள் மதிப்பார்களா?, இதை நீயே யோசித்துப்பார். கோபவசப்பட்டு எதையும் பதறிச் செய்துவிடலாகாது. துரோணாச்சாரி தீர்ப்பின்படி பாண்டவர்கள் வனவாசஞ் செய்து பதின்மூன்று வருடங்களையும் கழித்து வரட்டும். அதன்பின் உன் கருத்தின்படி நடந்துகொள்ளலாம்" என்றனர். அவ்வாறு தனது வமிச கர்த்தாவும் குலகுருவுமாகிய வியாச பகவான் கூறியதைத் துரியோதனன் கேட்டு, அயித்திரியமுனிவரால் நேரிட்ட சாபத்தை நினைந்து, இவர் சொல்லையுங் கடந்தால் இவராலும் சாபம் நேரிடுமென்றஞ்சி, சேனைகளைத் திருப்பிக்கொ

ண்டு அத்தினபுரத்தை யடைந்தான். பின்பு வியாசர் காமியவனத் திற்குச்சென்று ஐவராலும் திரௌபதியாலும் பூசிக்கப்பெற்று அவர்களுக்குப் பல ஆசிகள் கூறி நின்றார். அப்படி நின்றவரை நோக்கித் தருமராசன் "என்னையனே, துரியோதனாதியர் இந்திரப் பிரஸ்தத்திலிருந்த எங்களை அத்தினபுரத்திற் கழைப்பித்து சகுனி யோடு சூதாடச்செய்து, பின்பு இவ்வனத்தில் வந்து வாசஞ்செய் யும்படி செய்துவிட்டனர். என்னால் என் சகோதரர்களும் பாஞ்சா லியும் துன்பத்தை யனுபவிக்கிறார்கள்" என்று கூறினான். வியாத முனிவர் "ஓ தருமநந்தனா, சென்றதை நினைந்து வருந்துவதிற் பய னில்லை. சென்றதை நினைந்து வருந்துவோரும் இனி வருவதைக் கருதி மகிழ்வோரும் மனிதருட் பதராவர். ஆதலால் ஊக்கத்தைக் கைவிடாமல் இனிச் செயற்பாலது யாதோ அதையே முயன்று செய்தல் வேண்டும்" என்றனர். தருமராசன் "வேதங்களைச் சிக்கறுத்த வேதியர் பெரும, இனி நாங்கள் செய்யவேண்டியதி யாது?; அதனைத் தேவரீரே கட்டளையிட்டருளல் வேண்டும்" என் றனன். வியாதர் "துரியோதனனோ அசத்தியன். பதின்மூன்று வருடங்கழிந்த பின்னும் உங்கள் நாட்டை உங்களுக்குக்கொடான். போர்செய்து தன்னுயிரை யிழப்பான். அவனுக்குச் சுயபல மிருப் பதோடு சேர்க்கைப் பலமுமிருக்கிறது. என்சொலினும் கைத்து டையான் காற்கீழொதுங்குங் கடன் ஞாலம். அவனைச் சாமானியன் என்று எண்ணிவிடலாகாது, நீங்கள் அவனை வெற்றிகொள்ளவேண் டினால், மலையைச் சிலையாகவளைத்த மகேசுவரனுடைய திருக்கரத் திலிருக்கும் பாசுபதாஸ்திரத்தைப் பெறல்வேண்டும். அதைப் பெற்றால் துரியோதனாதியரை இலேசாய்வென்றுவிடலாம். அதைப் பெறத்தக்கவன் அருச்சுனன் ஒருவனே. அவன் அதைப் பெற வேண்டித் தவஞ்செய்தல்வேண்டும்" என்றருளினர். அருகிலிருந்த அருச்சுனன் அதைக்கேட்டு, அவரை வணங்கி, "சுவாமீ, தேவரீ ருடைய உண்மைத் திருவாக்கால் தவத்திற்கு அருகன் என்று சொல்லப்பெற்ற என் பாக்கியமே ஒப்பற்ற பாக்கியம்" என்று தோத்திரித்து நின்றான். வியாதர் அருச்சுனனை நீராடி வரச்செய்து ஒருமந்திரத்தை யுபதேசித்து "வெள்ளிமலைச் சாரலில் தேவதேவ னாகிய சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெறக் கடவாய்" என்றுகூறி தருமராசன் முதலியோருக்கும் ஆசி கூறிச் சென்றனர்.

(இன்னும் வரும்.)

# சந்நியாசி.

## ஆறுமுக நாவலரவர்கள் நான்காம் பாலபாடம்.

சந்நியாசியானவன் எல்லாப்பற்றுக்களையும் முற்றத்துறந்தவன். சந்நியாசி காஷாயவஸ்திரமேயன்றி வேறுவஸ்திரந்தரிக்கலாகாது. அவனுக்குத் தண்டகமண்டலங்களும் இருத்தல்வேண்டும். பிதா மாதாப் பெண்டிர் பிள்ளை முதலானோரிடத்தும் பொருண்முதலான வைகளிடத்தும் பற்றில்லாதவனே காஷாயந்தரித்தல் வேண்டும். பற்றுள்ளவன் காஷாயந்தரித்தால், ரௌரவ நரகத்திலே கிடந்தழுந்துவன். இல்லறத்தின் வழுவினால், அவ்வழுப் பிராயச்சித்தத்தினாலே நீங்கும். துறவறத்தின் வழுவினால், அவ்வழு அவனை நரகத்திற் செலுத்துவதன்றிப் பிராயச்சித்தத்தினாலே நீங்காது. துறவறத்தின் வழுவுதல் மலைச்சிகரத்தினின்று தவறி விழுதல் போலும்.

சந்நியாசி சற்குருவை வழிபட்டு, ஞானசாத்திரங்களை ஓதி, அவற்றின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, நிட்டை கூடல்வேண்டும். தன்னை அடைந்த பரிபக்குவர்களுக்கு அவைகளை ஓதுவித்து, அவைகளின் பொருளைப் போதித்தல்வேண்டும்.

சந்நியாசி ஒருவரையும் பகைக்கலாகாது. அநித்தியமாயும் உரோகத்துக்கு இருப்பிடமாயும் உள்ள சரீரத்தின்பொருட்டு ஒருவரோடும் கோபிக்கலாகாது. தம்மவரென்றும் பிறரென்றும் விருப்பும் வெறுப்பும் வைக்கலாகாது. எல்லாவுயிர்களிடத்தும் கருணையுடையவனாய் இருத்தல்வேண்டும். நடக்கும்போது தரையிலே யாதொரு ஜந்துவும் இல்லாதிருக்கப்பார்த்து அடிவைத்தல்வேண்டும். தண்ணீரை நன்றாக வஸ்திரத்தினாலே வடித்துச் சுத்திசெய்து குடித்தல்வேண்டும். தன்னை ஒருவன் வைதாலும், அடித்தாலும், மற்றை எவ்வகைத் துன்பஞ்செய்தாலும், அவன்மேல் வெறுப்புக் கொள்ளாமல், இனிய வார்த்தைகளையே பேசல்வேண்டும். தனக்குப் பிறர் செய்யும் அவமானத்தை அமிர்தமாகவும், வழிபாட்டை விஷமாகவும் கொள்ளல்வேண்டும். வெய்யில் காற்று முதலானவைகளுக்கும், சரீரத்தில் வரும் துன்பங்களுக்கும், சிறிதும் அஞ்சாமல், அவைகளைச் சகித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் இருத்தல்வேண்டும். உயிரோடிருத்தலையும் இறத்தலையும் சமமாகவே எண்ணல் வேண்டும்.

சந்நியாசி தாம்பூலம் சந்தனம் பூமாலை ஆபரணம் முதலிய போக்கியப் பொருள்களை அநுபவித்தலும், கீதங்கேட்டலும், கூத்துப்பார்த்தலும், பெண்களை இச்சித்தலும், அவர்களோடு பேசுதலும், அவர்கள் கூட்டத்திற்போதலும், கோயிலதிகாரஞ்செய்தலும், அரசர்வாயிலிற்செல்லலும், கழுத்தின்மேலன்றிக் கழுத்தின் கீழே க்ஷௌரஞ்செய்து கொள்ளலும், காஷாயவஸ்திரத்தை முழங்கால்களின்மேலன்றி முழங்கால்களின்கீழே தொங்கும்படி உடுத்தலும் ஆகாவாம்.

சந்நியாசி வலக்கையிலே பிக்ஷாபாத்திரத்தையும் இடக்கையிலே தண்டத்தையும் தரித்துக்கொண்டு, நற்குடிப்பிறப்பும் நல்லறிவும் நல்லொழுக்கமும் ஈசுரபத்தியுமுடைய கிருகத்தர்கள் வீட்டிலே மௌனத்தோடு போய், பிக்ஷை வாங்கி, ஒருபொழுது உண்ணல் வேண்டும். தரித்திரரிடத்தே செல்லலாகாது. பிக்ஷையின் பொருட்டு யாரையேனும் நெருக்கலாகாது. பிக்ஷைக்குப் போனால், முற்றத்திலே தன்னிரண்டு கண்களையும் வலக்காற் பெருவிரலில் வைத்துக்கொண்டு நின்று, பிக்ஷையேற்றல்வேண்டும். பிக்ஷையின் பொருட்டு ஒரு பசுக்கறக்கு நேரமட்டும் நிற்றல்வேண்டும். அவ்வளவும் பிக்ஷை வாராதொழியின், மற்றை வீட்டுக்குச் செல்லல்வேண்டும்; செல்லும்பொழுது, பிக்ஷையிடக் கொண்டுவந்தவர் அழைக்கின், அவ்விடத்திற்றானே நின்றுகொண்டு வாங்கல்வேண்டும்; திரும்பிப்போய் வாங்கலாகாது. பிக்ஷை கிடைத்தபோது சந்தோஷித்தலும், கிடையாதபோது துக்கித்தலும் ஆகாவாம். விஷயங்களால் இழுக்கப்படுகின்ற இந்திரியங்களை, அற்ப போசனத்தினாலும், ஏகாந்தத்தில் வசித்தலினாலும், நல்வழியிற் றிருப்பல்வேண்டும். குறிசொல்லல், வைத்தியம், சோதிடம், மந்திரவாதம் முதலியவைகளினாலே பிக்ஷை சம்பாதிக்கலாகாது.

பிக்ஷை சாந்தானிக பிக்ஷையும், கண பிக்ஷையும், மாதுகரி பிக்ஷையும், அயாசித பிக்ஷையுமென நான்குவகைப்படும். ஆசிரியர் முதலாயினோர், பத்தர்களாயினும், சீடர்களாயினும், அன்பினோடு தாமே தரும் மடம் விளைநில முதலியவைகளைச் சந்தானபரம்பரையாக அநுபவிக்கும்படி வாங்குவது சாந்தானிகபிக்ஷை. இல்வாழ்வாருடைய தெருவிலே புறப்பட்டு வீடுதோறும் அரிசிவாங்குவது கணபிக்ஷை. வண்டானது ஒரு பூவிலிருந்து அதனை வாதியாமல் பலபூக்களினுஞ் சென்று சிறுகச் சிறுகத் தேனைக் கிரகித்தல்

போல; விரக்தனானவன் ஒருவரை யாசியாமல் பலரிடத்தும் சென்று சிறுகச் சிறுக அன்னம் வாங்குவது மாதுகரி பிக்ஷை. தனக்கென்று காசையும் பணத்தையும் தானியத்தையும் தீண்டாதவனுக்கே இந்த மாதுகரிபிக்ஷை பண்ணுதல் தகும். மத்தியானமாதற்கு முன்னே மாதுகரி பிக்ஷைக்குப் புறப்படலாகாது. விரதத்தின் முதிர்ச்சியினாலே 'நமக்குள்ள பிராரத்தத்தை நாம் எங்கே இருப்பினும் கடவுள் புசிப்பிப்பர்' என்று துணிந்து, இருந்தவிடத்திலே தானே ஒருவன் தானாகக் கொண்டுவந்து தந்ததை வாங்கிப் புசிப்பது அயாசித பிக்ஷை.

ஈசுரநிந்தகர், குருநிந்தகர், வேதநிந்தகர், ஆகமநிந்தகர், தேவத்திரவியங்கவர்வோர், சமயாசாரமில்லாதவர், கொலைஞர், கள்வர், கள்ளுண்போர், புலாலுண்போர், பிறன்மனை நயப்போர், பொய்ச்சான்று சொல்வோர், பொய்வழக்குப் பேசுவோர், கன்னிகையை விற்போர், இழிந்த வருணத்தார் முதலாயினோரிடத்துப் பிக்ஷை வாங்கலாகாது. இவர்களுடைய அன்னத்தைப் புசித்தவர்களுக்கு ஒருபோதும் சித்தசுத்தி பிறவாது. அதனால் அவர்கள் மேன்மேலும் பாவங்களையே செய்து நரகத்துன்பத்தை அநுபவிப்பர்கள். அழுக்குப் புடைவையுடுத்தவள், கருப்பிணி, வெள்ளாட்டி, நற்குணமில்லாதவள், எண்ணெயிட்டுக்கொண்டவள், தாம்பூலந்தின்றவள், கணவனுக்கு முன்னுண்பவள், அருவருப்பானவள், உறுப்புக்குறைந்தவள், கருங்குட்ட முதலிய நோயுடையவள், விதிப்படி சௌசமுதலியன செய்யாதவள், சனனமரண சௌசமுடையவள் முதலியோர்கள் இடும் அன்னம் வாங்கலாகாது. தீக்ஷையில்லாதவருடைய அன்னம் தீக்ஷையுடையவர் புசிக்கலாகாது.

சந்நியாசவேடந் தரித்துக்கொண்டு மண் பொன் பெண்களில் இச்சைவைப்பவர்களும், கோயிலதிகாரஞ்செய்யப் புகுந்து தேவத்திரவியங்களை உபயோகிப்பவர்களும் பதிதராவர்கள். அவர்கள் இருபத்தெட்டுக்கோடி நரகங்களிலுங் கற்பகாலங் கிடந்தழுந்துவர்கள். அவர்கள் அநுபவிக்கும் நரகத்துன்பங்களைச்சொல்லமுடியாது. அவர்கள் எண்ணில்லாததரம் மலப்புழுவாய்ப் பிறந்து பிறந்து, மலத்தை உண்டிறப்பர்கள். இப்பிறவியினும், மேல் வரும் பிறவிகளினும், சுகசன்னி, பிரமேகம், கிரந்தி, பகந்தரம், அரையாப்பு, நீரடைப்பு, கிரகணி, நீரிழிவு, மூலரோகம், பிளவை, பெருவியாதி,

குட்டம், கயம், மகாசுவாசம், குன்மம் முதலிய எண்ணில்லாத வியாதிகளினாலே வருந்துவர்கள். அப்பதிதர்களை வணங்குதலும், அவர்களோடு கூடுதலும், அவர்களோடு பந்தியிலிருந்து புசித்தலும் அவர்களைத் தீண்டலும், பிறவும் பெரும்பாதகங்களாம். ஆதலினாலே, நரகத்துன்பத்துக்கும் பிறவித்துன்பத்துக்கும் அஞ்சினவர்கள், அப்பதிதர்களைக் கண்டால், தூரத்திலே நீங்கிவிடக்கடவர்கள்.

பிரமசரியமுதலிய நான்காச்சிரமங்களும் கிருகஸ்தாச்சிரமத்தினாலேயே நிலைபெறுகின்றன. சாத்திர விதிப்படியே அதனதன் கருமங்களை நடத்திவந்தால், இந்த நான்காச்சிரமங்களும் தனித்தனியே மோக்ஷத்தைக் கொடுக்க வல்லனவாம். நான்காச்சிரமிகளுள்ளும், வேதாகமங்களின் விதிப்படி ஒழுகும் கிருகஸ்தன், மற்றை மூன்றாச்சிரமிகளையும் பிக்ஷைகொடுத்துப் பாதுகாத்தலினாலே உயர்ந்தவனென்று சொல்லப்படுகின்றான். நதியும் நதமும் சமுத்திரத்தைச் சேர்தல்போலவே, பிரமசாரியும் வானப்பிரஸ்தனும் சந்நியாசியும் கிருகஸ்தனையே பிக்ஷையின்பொருட்டுச் சேர்கின்றார்கள். நதியென்பது கிழக்குமுகமாக ஓடும் ஆறு. நதமென்பது மேற்குமுகமாக ஓடும் ஆறு.

தேவர்கடனை யஞ்ஞத்தினாலும், முனிவர்கடனை வேதாத்தியயனத்தினாலும், பிதிர்கடனைப் புதல்வரைப் பெறுதலினாலும் தீர்த்துக்கொண்டே, சந்நியாசத்திற் பிரவேசித்தல்வேண்டும். பிரமசரியத்திலிருந்து கிருகஸ்தாச்சிரமத்தையும், அதிலிருந்து வானப்பிரஸ்தாச்சிரமத்தையும், அதிலிருந்து சந்நியாசாச்சிரமத்தையும் அடைவதே தகுதி. ஆயினும் கிருகஸ்தாச்சிரமத்திற்கு உரிய சத்தியில்லாதவரும், பிரபஞ்சத்திலே மிக்கவைராக்கியமுடையவரும், விரும்பியபோது சந்நியாசம்பெறலாம்.

சந்நியாசம் பெற்றவர், குளிக்கப்போய்ச் சேறுபூசிக்கொள்ளுதல்போலக் கூடாவொழுக்கம் பூண்டு பழிபாவங்களை அடையாமல், தங்கள் காலமெல்லாம், செபம், தியானம், பூசை, ஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்பவைகளிலே, போக்கல்வேண்டும். இவை செய்யாதவருடைய சந்நியாசவேடம் சிறிதும் பயன்படாது.

**திருமந்திரம்.**

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடமெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே.

**திருவள்ளுவர்.**

வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

---

## ஸ்ரீ பஞ்சாக்கர மகிமை.

( 134 - வது பக்கத் தொடர்ச்சி. )

பஞ்சாட்சரமானது மோக்ஷசாதனத்திற்கு மூலமாயிருப்பது மன்றி, அவ்வவர் விருப்பத்தின்படி தம்பனம், மோகனம், வசியம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், பேதனம், மாரணம் என்னும் அஷ்ட கருமவித்தை முதலிய சித்திகளையுங் கொடுக்கும்.

இத்திருவைந்தெழுத்து சாதக அதிகாரிகளின் பக்குவ தாரதம்மியத்தின்படி சோபானக்கிரமத்தில் முறையே தூலம் சூக்குமம் காரணம் மகாகாரணம் முத்தி என்னும் ஐந்துவகையாய் விளங்கும். அன்றியும், முறையே தூலத்திற்றூலம், தூலத்திற் சூக்குமம், தூலத்திற் காரணம், தூலத்தில் மகாகாரணம், தூலத்தில் முத்தி எனவும், சூக்குமத்திற் றூலம், சூக்குமத்திற் சூக்குமம், சூக்குமத்திற் காரணம், சூக்குமத்தில் மகாகாரணம், சூக்குமத்தில் முத்தியெனவும், காரணத்தில் தூலம் காரணத்திற் சூக்குமம், காரணத்திற் காரணம், காரணத்தின் மகாகாரணம், காரணத்தின் முத்தியெனவும் பதினைந்து வகையாகவுமிருக்கும். இவை அவரவர்கள் தத்தம் அநுசந்தான வவசரசந்தற்பங்களுக் கியைய ஆசிரியர் மூலமாய் அறிந்துகொள்ளற் பாலனவாம்.

ஸ்ரீ பஞ்சாக்கரமானது நகரத்தை முதலிலும் யகரத்தை யிறுதியிலும் வைத்து செபிக்கும்போது தூலபஞ்சாக்கர மென்னப்படும். இது அவரவர்களின் சமயாசார கன்மாநுட்டானங்களுக்கு இன்றியமையாததாய்ச் சமயாசாரியராகிய காரிய குருவினாலே யாவர்க்கும் முதலில் உபதேசிக்கபபடுவதாம். நகார மகாரங்களை இறுதி

யிலும் சிகார வகாரங்களை முதலிலும் யகாரத்தை யிடையிலும் கொண்டிருப்பது சூக்கும பஞ்சாக்கரம் எனப்படும். இது தூல பஞ்சாக்கரத்தை நியமமாக வநுட்டித்துப் பக்குவ மடைந்தவர்க்கே மோக்ஷசாதனையின்பொருட்டு ஞானசாரியராகிய காரண குருவினல் உபதேசிக்கப்படுவதாம். சிகார வகாரங்க ளிரண்டையும் முறையே எதிர் நிரனிறையாக நிறுத்தி யகாரமானது நடுவேநிற்குமாறு "விகடகவி" என்பதுபோலத் தொடுத்து நிற்பதே காரண பஞ்சாக்ஷரம் எனப்படும். இதனை விகடகவி என்னுஞ் சொல்லில் ட நிற்குமிடத்தில் யகாரத்தையும், க நிற்குமிடத்தில் வகாரத்தையும், வி நிற்குமிடத்தில் சிகாரத்தையும் வைத்தெழுதி யறிந்துகொள்க. இக்காரண பஞ்சாட்சரத்தைப் பெரியோர்கள் இருதலைக் கொள்ளியெனவும் இருதலைமாணிக்கம் எனவும் குறியீடுசெய்து வழங்குவர். இது சாமானியர்க்குபதேசிக்கப்படுவதன்று.

இக்காரண பஞ்சாக்கரமாகிய சிகார வகார யகாரங்களுள்ளே யகாரமாகிய வான்மாவானது சிகாரமாகிய சிவத்தினல் வகாரமாகிய அருளிலே இலயப்பட்டு நிற்க, அருளும் சிவமுமாகிய வகாரம் சிகாரம் என்னும் இரண்டுமாத்திரமாய் நின்று விளங்குவதே மகாகாரண பஞ்சாட்சரமெனப்படும். இது சுவேதாச்சுவதரம், பிருகதாரணியம் கடகவல்லி முதலிய உபநிடதங்களில் தூரீய பிரமத்தின் திருநாமமாகத் தொனிக்கப்பெற்று விளங்குகின்றது. இது தமிழ் மறையில் முதனீண்டு "வாசி" எனவும், வடமொழிச் சுருதியில் இறுதிநீண்டு "வஸீ" எனவும் ஒசை பயப்பநிற்கும். இதனை "வாசியருளியதை வாழ்விக்கு மற்றதுவே-யாசி லுருவமுமா மங்கு" என்னும் திருவருட்பயனாலும், "வாசிவாவென்று வாசியைவைத்து, வாசியோடொன்ற வகையறிவாரில்லை, வாசியோடொன்ற வகையறிவாளர்க்கு, வாசியோடீசன் மகிழ்ந்திருந்தானே" என்னுந் திருமந்திரத்தாலும் அறிக.

இம்மகாகாரண பஞ்சாட்சரமாகிய துரியமந்திரமே சிவன் சிவை சிவம் என்னும் முப்பாற்பொருளும் பெறப்படுமாறு அதீதப் பொருளாய்நின்ற பரப்பிரமத்திற்கு யோகவிசேட நாமமாய் அமைந்து சிவ என விளங்கி நிற்பதாம். இதுபற்றியே கொடிய சண்டாளனயினும் சிவ என்னும் நாமத்தை உச்சரிப்பானயின் அவனோடு பேசுக, அவனோடு வசிக்க, அவனோடிருந்துண்ணுக என்று முண்டகோப நிடதம் முறையிடுகின்றது.

இம்மகாகாரண பஞ்சாட்சரமாகிய சிகார வகாரங்களிரண்டி னுள், வகாரமாகிய அருளையும் தன்னிடத்து லயப்படுமாறு அடக் கிக்கொண்டு சிகாரமாகிய பதியெழுத்து மாத்திரமாய் தனித்து நிற் பதே முத்திபஞ்சாட்சர மெனப்படும். இதனைப் பெரியோர்கள் நாயோட்டுமந்திர மெனவும், மகாமனு வெனவும், இறையெழுத் தெனவும், பெருவெழுத்தெனவும், பிரம பீஜமெனவும் பரிபாஷை யாக வழங்குவர். இதின்பெருமை மகாசிவஞானிகளாலேயே அநு பவவாயிலாய் உணரப்படுவதாம்.

### திருமந்திரம்.

நாயோட்டுமந்திர நான்மறைவேத
நாயோட்டுமந்திர நாதனிருப்பிட
நாயோட்டுமந்திர நாதாந்தசோதி
நாயோட்டுமந்திர நாமறியோமே.

ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பெருமை யளவிடற்கரியது. அனுபவ ஞானம் அணுத்துணையும் இல்லாத எம்போலிகள் அதின் பெரு மையைமுற்றிலும் எடுத்து விரிக்கவிரும்புவது ஒரு சுணங்கன் சமுத்திரத்தை முற்றிலும் பானம்பண்ண விரும்புவதுபோலாம். ஆதலால் இவ்வியாசத்தை இம்மட்டோடே நிறுத்தி இடம் வந் துழி ஆங்காங்கு இயன்றவாறு விளக்கிவருவோம்.

### தமிழ்வேதம்.

நமச்சிவாயவே ஞானமுங்கல்வியு
நமச்சிவாயவே நானறிவிச்சையு
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமசிவாயவே நன்னெறிகாட்டுமே.

### திருமந்திரம்.

ஐம்பதெழுத்தே யனைத்துவேதங்களு
மைம்பதெழுத்தே யனைத்தாகமங்களு
மைம்பதெழுத்தி னடைவையறிந்தபி
னைம்பதெழுத்தே யஞ்செழுத்தாமே.

### பிரமோத்தரகாண்டம்.

மூதறிநன்னெறிக் கொருதுணை மோகவாரிதிக்கு
வைத்தசெஞ்சிகை வடவனல் வினைவனத்திற்குப்
பொத்திநுங்குவெங் கதழெரி புனைமதிக்கண்ணி
யத்தனெந்தை யஞ்செழுத்திது கடைப்பிடித்தறிமின்.

# சைவப் பத்திரிகாசிரியர் சரித்திரச் சுருக்கம்.

பத்திரிகாசிரியராகவும் கிரந்தகர்த்தராகவுமிருந்து உலகத்திற்கு உபகரித்து வருவோர்களின் சரித்திரங்களை யறியவிரும்புவது உலக இயற்கை. ஆதலால் ஐரோப்பியர் முதலாயினோர் தம்மினத்தவர்களுள் அவ்வக்காலத்தில் தோன்றும் பத்திரிகாசிரியர் முதலாயினோருடைய சரித்திரங்களை யெழுதி யச்சிட்டு உலகத்திற்குப் பயன்படுத்துவது வழக்கமாயிருந்து வருகிறது. நம்மவர்கள் அவ்வாறு செய்யாமையால் பல தமிழ் நூலாசிரியர்களின் சரித்திரங்கள் வெளிவராமல் மறைந்துபோயின. அவர்களுக்குப் பிற்காலத்தில் எழுதப்பெற்ற சரித்திரங்களுள்ளும் பல குன்றக்கூறல், மிகைபடக்கூறல், மாறுபடக்கூறல் முதலிய குற்றங்களுக்கு இலக்காயிருக்கின்றன. ஆதலால் யான் நமது சைவபத்திரிகாசிரியரின் சரித்திரத்தை இப்போதே இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடுவதைப் பலமுறை உத்தேசித்தேன். உத்தேசித்தும் இவர் வெளியிட்டுவரும் பத்திரிகையிலேயே இவர் சரித்திரத்தை யெடுத்துக்கூறுவது இவரைத் தற்புகழ்ச்சி யென்னுங் குற்றத்தின் பாற்படுத்துமென வஞ்சி என் விருப்பத்திற்கு மாறாக இதுவரையில் வெளியிடவில்லை. ஆயினும் இவர் சரித்திரத்தை இப்பத்திரிகையிலேயே வெளியிடுவதனால் இப்பத்திரிகை விருத்தியடைந்து சைவ உலகத்திற்கு பலநலங்கள் உண்டாகக்கூடுமென்று தீர்மானித்து இப்போது அதனை மிகவும் சுருக்கி வெளியிடலானேன்.

நமது சைவப் பத்திரிகாசிரியர் தமது இளமைப்பருவத்திலிருந்தே சைவசமயாபிமானமும் சிவபுண்ணியஞ் செய்தலில் பெருவிருப்பமும் உழைப்பும் உடையவராயிருந்து வருகிறார். இவர் ஆங்கில பாடசாலைகளில் கல்விபயின்றுகொண்டிருந்தபோதே வைணவ உபாத்தியாயர்கள் யாரேனும் சைவநிந்தனை செய்வாராயின் அதைத் தாட்சிணியமின்றிக் கண்டித்து சைவ சமயத்தின் ஏற்றத்தை நிலைநிறுத்துவர். தம்முடன் கல்விகற்றுக்கொண்டிருந்த சிறுவர்களைக்கூட்டி பால ஞானபோதினி சபை என்ற சபையொன்று வைத்து அவர்களுக்குக் கடவுட் பத்தியையும் சைவஉண்மைகளையும் போதிப்பித்து வந்தனர். பாடசாலையில் கல்விகற்பதைவிட்ட பிறகு ஹிந்து மதாபிமானசபை என்னுமோர் சபைவைத்து மகாஜனக்கூட்டங்கள் கூட்டியும், வீதிப்பிரசங்கங்கள் செய்தும், கிறிஸ்து

சமயத்தின் கோட்பாடுகளையும் வைதிக சமயங்களின் ஏற்றத்தையும், கிறிஸ்தவர்கள் செய்யும் முயற்சிகளையும் அம்முயற்சிகளால் இத்தேசத்தவர் எண்ணிறந்தோர் தனித்தனியாகவும், கூட்டங் கூட்டமாகவும், கிராமங்கிராமமாகவும் கிறிஸ்தவர்களாதலையும், அதைப்பார்த்துக்கொண்டு இத்தேசத்து வைதிகசமயிகள் வாளாவிருத்தலையும் எந்நேரமும் எடுத்தெடுத்து விளக்கிக்கொண்டிருந்தனர்.

இவர் உத்தியோகத்தில் அமர்ந்தவுடன் திருமயிலையில் வருடந்தோறும் பங்குனிமாதத்தில் நடைபெற்றுவரும் பிரமோற்சவ காலத்தில் அறுபத்துமூவர் மகோற்சவம் என வழங்கும் எட்டாநாள் திருவிழாவைத் தரிசிக்கச்சென்றபோது, நமது சைவ மகா சமய உண்மைகளைத் தங்கள் ஒழுக்கத்தால் விளக்கி உலகை வாழ்விக்கத் திருவவதாரஞ் செய்தருளிய உண்மை நாயன்மார்களின் மகோற்சவம் அவர்களின் தெரிவரும் பெருமைக்கேற்றவாறு சிறப்பாக நடைபெறாமை விருந்ததைக் கண்ணுற்று வருந்தி, அதனைச் சிறப்பிக்க விரும்பி, அத்தேவஸ்தான தருமகர்த்தரோடு யோசித்து, நாயன்மார்கள் எழுந்தருளுவதற்கென பதினாறு திவ்விய விமானங்களும், அவைகளுக்குவேண்டிய ஆயக் கால்கள் தண்டுக்கோல்கள் முதலியனவும் செய்து கொடுத்தனர். இக்கைங்கரியத்தை இவர் தொடங்கியபோது இவருக்கு வருவாய் மிகவும் குறைவாயிருந்தமையால் காலைமாலைகளில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்து அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு மிகவும் பிரயாசையோடு அச் சிவகைங்கரியத்தைச் செய்துவருவாராயினர். இவர் அவ்வாறு செய்துவந்தமையை ஸ்ரீமான் எழும்பூர் மதுரைநாயக முதலியார் என்னும் சிவநேய ரொருவர் அறிந்து, இவரைச் சில தனவான்களிடம் அழைத்துச்சென்று பொருள் சேகரித்துக்கொடுத்தனர். அச்சமயத்தில் ஒட்டகமண்ட் என வழங்கும் உதகமண்டலத்தில் சங்கிலிமேஸ்திரி யென்னும் சிவநேயரொருவர் தமக்கு நெடுங்காலமாகப் புத்திரப்பேறின்றி வருந்தி, அது பெறவேண்டி விநாயகப் பிரதிட்டை செய்தும், பல பிரார்த்தனைகள் செய்து கொண்டும், விரதங்களை யநுட்டித்துக்கொண்டும் இருந்தனர். அவர் பத்திரிகாசிரியரை யறிந்திருந்தமையால் அவருக்கு இவர் கடிதம் எழுதி நாயன்மார்களின் விமானங்களைச் செய்தற்குப் பொருளுதவி செய்யும்படி கேட்டனர். உடனே அச்சிவநேயர் இவருக்கொரு

கடிதம் எழுதி அதில் "எனக்கு வெகுகாலம் புத்திரசந்தானமில்லாமலிருப்பதால் பலவிதமான வைத்தியம் விரதம் பிரார்த்தனைகள் எவ்வளவோ செய்தும் பிரயோசனப்படவில்லை. ஆகையால் இவ் வருஷம் புத்திரசந்தானம் உதித்தால் வருகிற பங்குனிமாதத்தில் பாக்கியாயிருக்கிற விமானங்களை முழுவதும் நானே செய்துவைக்கிறதாக தங்களைக்கொண்டு பிரார்த்தித்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணியிருந்தேன். மறுபடி எப்படியானாலும் ஆகட்டும், இவ் வருஷத்திலேயே முடிக்கலாமென்று யோசித்திருக்கின்றேன். * * * * * * என்னுடைய சந்தான குறைவைப் பற்றி தங்கள் ஆசீர்வாதமும் 63 நாயன்மார்கள் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவருளும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்தார். பத்திரிகாசிரியர் அக்கடிதம் கிடைத்ததும் தமது மனோரதம் நிறைவேறிற்றென்று களிகூர்ந்து உடனே அவருக்குப் பதிலெழுதி, அறுபான்மும்மை நாயன்மார்களிடம் பத்திபூண்டொழுகுவோர்க்குப் புத்திரசந்தானத்தோடு சகல போகபாக்கியங்களும் உண்டாவது திண்ணமாதலால் அவர் விரும்பியவாறே புத்திரப்பேறுண்டாவது திண்ணமாமென்று தெரிவித்தனர். இவர் எழுதியதை விசுவசித்து அவர் உடனே பெருந்தொகை யனுப்பியும், தமது பந்துசனங்களைக்கொண்டு பொருளுதவிசெய்வித்தும் அவ்வருடத்திலேயே விமான கைங்கரியத்தைப் பூர்த்திசெய்வித்தனர். நாயன்மார் திருவருளால் அவ்வருடமுதலாக அவருக்குப் புத்திரப்பேறுண்டாகத் தலைப்பட்டது. அவர் அதனால்களிகூர்ந்து பந்துக்கள் சகிதமாய் சென்னைக்கு வந்து தமக்குப் புத்திரப்பேறருளிய நாயன்மார்களின் மகோற்சவத்தைத் தரிசித்து அதுமுதல் இவரை பின்னும் அதிகமாக விசுவசித்து சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினருள் ஒருவராயிருந்தனர். இக்கைங்கரியம் (1894-95-96) விஜய ஜய, மன்மத என்னும் மூன்று வருடங்களில் நடைபெற்றன. இதன்பொருட்டு நேரிட்டசெலவு ரூபா 682 இதற்கு வரவு செலவுக் கணக்கு அச்சிட்டு வெளியிடப்பட்டதன்றி பொருளுதவி செய்தவர்களின் பெயர்கள் விமானங்களில் செதுக்கி எழுதப்பட்டுள்ளன. அதுமுதல் பத்திரிகாசிரியர் இம் மகோற்சவகாலத்தில் தண்ணீர்ப்பந்தர்வைத்து வருகிறார். இந்த மகோற்சவம் முன்னினும் மிகவும் சிறப்பாய் நடைபெற்று வருகின்றது. திருமயிலையில் அறுபத்துமூவர் மகோற்சவத்தில் ஸ்ரீ கபா

வீக்ஷுர மமர்ந்தார் கற்பகவல்லி யம்மையார்சமேதராய் ஸ்கந்த கணேச சண்டேசர்களோடும் நாயன்மார்களோடும் எழுந்தருளுங் காட்சி திருக்கைலாயக் காட்சியே யென்று சொல்லவேண்டும்.

இவர் மூர்க்கநாயனர் வாசஸ்தானமாகிய திருவேற்காட்டில் வருடந்தோறும் சித்திரை மாதத்தில் நடைபெற்றுவரும் திருவூறல் மகோற்சவகாலத்தில் சென்று கூடும் சிவ நேயர்களுக்குத் தண்ணீர்ப்பந்தர் முதலிய வசதிகள் இல்லாக்குறைவை யறிந்து 1897-வது வருட முதல் அவ்விடத்தில் தண்ணீர்ப்பந்தர் வைத்து நீரும் மோரும் சித்திரான்ன முதலியனவும் வழங்குவாராயினர்.

(தொடரும்.)

மா. தங்கவேற் பிள்ளை,
திருமறைத்திருவன்.

---

## திருமூலநாயனர் புராணம்.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
யடிமன்ன வைத்த பிரான்மூல னுகின்ற வங்கணனே.

திருக்கைலாசத்திலே, சிவபெருமானது ஆலயத்துக்கு முதற் பெருநாயகராகிய திருநந்திதேவருடைய திருவருளைப்பெற்ற மாணக்கர்களாகிய சிவயோகிகளுள் ஒருவர், அகத்திய மகாமுனிவரிடத்தே பொருந்திய நண்பினலே அவருடன் சிலநாள் இருத்தற்கு அவர் எழுந்தருளியிருக்கும் பொதியமலையை அடைதற்பொருட்டு. திருக்கைலாசத்தை அகன்று வழிக்கொண்டு, திருக்கேதாரம் பசுபதிநேபாளம், காசி, ஸ்ரீ சைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சீபுரம், திருவதிகை, சிதம்பரம் என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு, திருவாவடுதுறையை அடைந்து, அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

ஒருநாள் அந்தத்தலத்தை அகன்று செல்லும்பொழுது, காவிரி ஆற்றங்கரையிலுள்ள வனத்திலே பசுக்கூட்டங்கள் அழுதலை எதிரே கண்டார். சாத்தனூரில் இருக்கின்ற இடையனகிய மூலனென்பவன் ஒருவன் அவைகளை மேய்க்கின்றவன். அவன் அத்தினத்திலே அவ்விடத்தில் இறந்துகிடந்தான். அப்பசுக்கூட்டங்கள் அவ

னுடைய சரீரத்தை வந்தணைந்து, சுற்றி மிகக் கதறிச் சுழன்று மோப்பனவாக; சிவயோகியார் கண்டு, "பரமசிவனது திருவருளினாலே இப்பசுக்களுடைய துயரத்தை நீக்கல்வேண்டும்" என்று ஆலோசித்து, "இவ்விடையன் உயிர்பெற்றெழுந்தாலன்றிப் பசுக்கள் துயரநீங்கா" என்று திருவுளங்கொண்டு, தம்முடைய திருமேனிக்குக் காவல்செய்து, தாம் அவ்விடையனுடைய சரீரத்தினுள்ளே பிரவேசித்து, திருமூலராய் எழுந்தார். எழுதலும், பசுக்களெல்லாம் நாத்தழும்ப நக்கி மோந்து, கனைத்து, மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளி, பின்பு போய் மேய்ந்தன. திருமூலநாயனார் அது கண்டு திருவுள மகிழ்ந்து, அவைகள் மேயுமிடத்திற் சென்று, அவைகளை நன்றாக மேய்த்தார். சூரியன் அஸ்தமயனமாக; பசுக்கள் தத்தங் கன்றுகளை நினைந்து, தாமே முன் பைய நடந்து, சாத்தனூரை அடைந்தன, சிவயோகியார் அப்பசுக்களுக்குப் பின் சென்று, அவைகளெல்லாம் வீடுகடோறும் போகத் தாம் வெளியிலே நின்றார்.

மூலனுடைய மனைவி "நாயகர் இன்றைக்கு மிகத்தாழ்த்தார்" என்று பயங்கொண்டு சென்று, சிவயோகியார் நின்ற இடத்தை அடைந்து, "இவருக்கு ஈனம் அடுத்ததுபோலும்" என்று, அவருடைய திருமேனியைத் தீண்ட; அவர் அதற்கு இசையாராயினார். அவள் அச்சுற்று மயங்கி, "என்செய்தீர்" என்று தளர; திருமூலநாயனார் "உனக்கு என்னோடு யாதொரு சம்பந்தமும் இல்லை" என்று மறுத்து, ஒரு பொதுமடத்தினுள்ளே புகுந்து, சிவயோகத்தில் இருந்தார். மனைவி அவ்விரவு முழுதிலும் நித்திரைசெய்யாது கவலைகொண்டிருந்து, மற்றநாள் அதனை விவேகிகள் பலருக்குத் தெரிவிக்க; அவர்கள் வந்துபார்த்து, அவளை நோக்கி, "இதுபைத்தியமன்று. வேறு சார்புள்ளதுமன்று. இவர் கருத்துச் சிவயோகத்தினிடத்ததேயாம். இனி இவர் உங்கள் சுற்றவியல்போடு கூடார்" என்றார்கள். அவள் அதுகேட்டுத் துயரம் எய்தி மயங்க; அவர்கள் அவளைக் கொண்டுபோய்விட்டார்கள்.

சிவயோகத்தில் இருந்த திருமூலநாயனார் எழுந்து, முதனாளிலே பசுக்கள் வந்த வழியே சென்று, தாஞ்சேமித்த சரீரத்தைக் காணாது, மெய்ஞ்ஞானத்தையுடைய சிந்தையினால் ஆராய்ந்து, "சிவபெருமான் ஆதிகாலத்திலே தம்முடைய பஞ்சவத்திரத்தினின்றும் தோற்றுவித்த காமிக முதலிய சைவாகமங்களிலே பேசப்பட்ட

மெய்ப்பொருளைத் தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டுத் தம்மையேனைக்கொண்டு தமிழினாலே ஒரு நூல் செய்வித்தற்பொருட்டு அச்சரீரத்தை மறைத்தருளினார்" என்று தெளிந்து, திருவருளைத் துதித்து, திருவாவடுதுறையை அடைந்து, அங்குள்ள சிவாலயத்திலே பிரவேசித்து, சிவபெருமானை வணங்கி, அதற்கு மேற்குப் பக்கத்தில் இருக்கின்ற அரசின்கீழேபோய், சிவயோகத்தில் இருந்தார். அவர் மூவாயிரம் வருஷமளவு அங்ஙனம் இருந்து, ஒவ்வொரு வருஷத்திற்கு ஒவ்வொரு திருப்பாட்டாக மூவாயிரந் திருப்பாட்டினால் சைவாகமங்களில் உணர்த்தப்பட்ட ஞானம் யோகம் கிரியை சரியை என்னு நான்கு பாதங்களையும் பேசுகின்ற திருமந்திரமென்னுந் தமிழ்நூலைப் பாடியருளி, பின் திருக்கைலாசத்தை அடைந்தார்.

## ஓர் வேண்டுகோள்.

சைவ சமயத்தைப் பரிபாலிப்பாரின்றி உலகில் சைவ நல்லொழுக்கங்கள் மிகவுங் குன்றியிருக்கும் இக் கலிகாலத்தில் நாம் சைவாபிமானத்தின் வசப்பட்டு இப் பத்திரிகையை வெளியிட்டு மிகவும் குறைந்த சந்தாவுக்குக் கொடுத்துவரத் தலைப்பட்டோம். தலைப்படலும் கலிபுருடன் எம்மைச் சோதிப்பதுபோல் காகிதப் பஞ்சம் உண்டாய்விட்டது. இப்பஞ்சத்தையும் பொருள் செய்யாமல் யாம் பத்திரிகையை வெளியிட்டு வருவதுமன்றி, 16 பக்கங்களாக வெளியிட்டுவந்ததை, 24 பக்கங்களாக அச்சிடத் தொடங்கினோம். தொடங்கலும், காகிதப்பஞ்சம் பின்னும் அதிகரித்துவிட்டது. ஆரம்பத்தில் 2½ அணு கொடுத்து வாங்கிய காகிதத்தை இப்போது 8½ அணு கொடுத்து வாங்கவேண்டியதாய் விட்டது. இனி போதுமான துணைவலியின்றி 24 பக்கங்களாகவே வெளியிட்டு வருவது இயல்வதன்று.

> பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
> விண்டுமி போனன் முளையாதாம்—கொண்டபேர்
> ஆற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
> ஏற்ற கருமஞ் செயல்.

ஆதலால், எவ்வளவு இடையூறுகளெய்தினும் இறைபணியில் இறையளவும் வழுவாது நின்ற வீரம் வாய்ந்த உண்மை நாயன்மார்கள் செய்து காட்டிய செந்நெறியொழுகும் சிவநேயச்செல்வர்களே, மாதந்தோறும் உங்கள் கரங்களில் வந்து தங்கி விளையாடித் தனது மழலை மொழிகளால் இறைவன் கழலிணைச் சீர்பரவும் இத்தெய்வச் செந்தமிழ்ச் சிறுகுழந்தையை நீங்கள் பெற்று வளர்க்குங் குழந்தைகளுள் ஒருகுழந்தையெனப் பாராட்டி இயன்றபொருளுதவிசெய்து, இவள் உருவம் பஞ்சத்தால் வாடா வண்ணம் பாதுகாக்குமாறு உங்களைப் பன்முறை பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் தினைத்துணை நன்றிசெயினும் அதனையாம் பனைத்துணையாக்கொண்டு உலகத்திற்குப் பயன்படுத்தி இவனைக் கொண்டே நன்றிபாராட்டுவோம்.

**திருக்குறள்.**

அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு. பத்திரிகாசிரியர்.

---

## ஆயுள் சந்தாதாரர்கள்.

இரங்கோன் ஸ்ரீமான் செவு. சித. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் மூலமாய்ச் சேர்ந்தவர்கள்.

313 ஸ்ரீமான் P. V. P. R. V. A. சோமசுந்தரம் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

1134 ,, L. M. L. வெள்ளையப்பச் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

19 ,, S. V. M. L. உலகப்பச் செட்டியாரவர்கள். Kyawzan, Pyapon Dist, Burma.

853 ,, P. R. M. P. R. முத்தையா செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

664 ,, V. E. R. M. V. நாராயணஞ் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

665 ,, L. A. R. நாராயணன் செட்டியாரவர்கள், Kyawzan, Pyapon Dist, Burma.

314 ,, M. சுவாமிநாதப்பிள்ளையவர்கள், Sub-Asst., Surgeon, Kyaiklat, Burma.

ஸ்ரீமான், K. P. M. R. M. நாராயணன் செட்டியாரவர்கள் மூலமாய்ச் சேர்ந்தவர்,

122 ஸ்ரீமான் M. S. கண்ணப்பச் செட்டியாரவர்கள், Kywegyan, B. Ry. Paung Post, Thaton Dist, Burma.

---

## பிழைதிருத்தம்.

சைவம், 3-வது மலர், 8-வது இதழ், 136-வது பக்கத்தின் இறுதியில் காட்டிய 663, 987 இலக்கத்து வருடாந்தச் சந்தாதாரர்களை ஆயுள் சந்தாதாரர்களாகக் காட்டியது பிழை.